| R5667 |
|---|

| Sub. Code |
|---|
| 423101 |

**P.G. DIPLOMA EXAMINATION, APRIL – 2021.**

தமிழ்ப் பண்பாடு **(Tamil Culture)**

தமிழர் பண்பாட்டு வரலாறு

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**பின்வரும்** வினாக்களுக்கு ஓரிரு சொல்/தொடர்களில் விடை தருக.

1. சிந்து சமவெளி நாகரிகத்தைத் திராவிட நாகரிகம் என்று முதன் முதலில் கூறியவர் யார்?

2. பழந்தமிழ்க் கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

3. தமிழகத்தைப் பற்றி எழுதிய மெகஸ்தனிசு பாண்டி நாட்டை ஆட்சி செய்த அரசியாக யாரைக் குறிப்பிடுகின்றார்?

4. பாணினியத்தின் எந்த உரையாசிரியர் தமிழகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்?

5. குறிஞ்சித் திணைக் கடவுள் பெயரைக் குறிப்பிடுக.

6. ஐந்திணையை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்ட பழந்தமிழ் இலக்கியங்கள் இரண்டினைச் சுட்டுக.

7. ஆநிரை கவர்தலைக் குறிக்கும் புறத்திணை எது?

8. கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தபோது வருவர் எனக் கருதிய புலவர் யார்?

9. வாய்மொழி இலக்கியங்கள் இரண்டினைக் கூறுக.

10. எந்தப் புழங்கு பொருள் வழி தொல்லியல் அறிஞர்கள் பண்டைய தமிழரின் தொழில்நுட்ப அறிவை விளக்கினர்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**பின்வரும்** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழ், தமிழர் என்ற பெயர்கள் பற்றி அறிஞர்கள் குறிப்பிடுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகள் பற்றி எடுத்துரைக்க.

12. (அ) நாகரீகம், பண்பாடு குறித்த விளக்கங்களையும் வரையறைகளையும் வெளிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) வடமொழி இலக்கியங்களிலுள்ள தமிழர் பற்றிய குறிப்புகளை எடுத்துரைக்க.

13. (அ) பண்டைத் தமிழரின் விருந்தோம்பல் பண்பினை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) குறிஞ்சித்திணை மக்களின் வாழ்வியலை மொழிக.

14. (அ) அரசர்-புலவர் உறவுநிலை பற்றிக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பண்டைத் தமிழரின் நீதிமுறையினை எடுத்தியம்புக.

15. (அ) தமிழர் பண்பாட்டில் விளையாட்டு பெறும் இடத்தினைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) தமிழ்ப் பண்பாட்டு ஊடாட்டம் பற்றி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

**பின்வரும்** வினாக்களில் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. 'தமிழரின் தாயகம்' – கட்டுரை வரைக.

17. தமிழினம் தோன்றிப் பரவிய வரலாற்றைத் தொகுத்துரைக்க.

18. 'தமிழரின் அகவாழ்வு' – விரித்துரைக்க.

19. 'தமிழரின் போர் நெறிகள்' – கட்டுரைக்க.

20. 'கடல் கடந்த தமிழர் பண்பாடு' – விவரிக்க.

---

| R5668 |
|---|

| Sub. Code |
|---|
| 423102 |

**PG DIPLOMA IN TAMIL CULTURE EXAMINATION, APRIL – 2021**

**TAMIL CULTURE**

**தமிழர் கலைகள்**

**(2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொல் / தொடர்களில் விடை தருக.

1. சிலப்பதிகாரத்திலுள்ள இசைக்குறிப்புகளை வெளிப்படுத்திய உரையாசிரியர் யார்?

2. இசைக் கல்வெட்டு என்று அழைக்கப்படும் கல்வெட்டு எது?

3. தமிழ் நாடகத்தின் தலைமையாசிரியர் யார்?

4. 'எழினி' என்பதன் பொருள் யாது?

5. முற்காலப் பாண்டியர் கால ஓவியங்களுள் புகழ்பெற்ற ஓவியம் எது?

6. ஓவியக்கலை பற்றிய குறிப்பு மணிமேகலையில் இடம்பெறும் காதை எது?

7. கற்றளி என்றால் என்ன?

8. இந்தியக் கட்டடக் கலையின் முப்பெரும் வகைகள் யாவை?

9. நிகழ்த்தாக் கலைகள் (Non-performing Arts) என்பது என்ன?

10. மகுடாட்டம் என்றழைக்கப்படும் நாட்டுப்புறக் கலையின் மற்றொரு பெயரினைத் தருக.

பகுதி ஆ (5 × 5 = 25)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஆழ்வார் நாயன்மார் பாடல்களில் வெளிப்படும் இசையுணர்வுகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பாரதி, பாரதிதாசனின் தமிழ் இசைக்கானப் பங்களிப்புகளைக் குறிப்பிடுக.

12. (அ) பழந்தமிழிலக்கியங்களிலுள்ள கூத்து பற்றிய குறிப்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நாடகக் கலையின் தோற்றம் பற்றி எழுதுக.

13. (அ) பல்லவர் கால ஓவியச் சிறப்பைச் சான்று காட்டி நிறுவுக.

(அல்லது)

(ஆ) தஞ்சை மராட்டியர் கால ஓவியக்கலையை வெளிப்படுத்துக.

14. (அ) புடைப்புச் சிற்பங்களின் கலை நுட்பத்தைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) தமிழகக் கோயில்களின் தோற்றம் பற்றிக் கருத்துரைக்க.

15. (அ) நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் குறித்து இயம்புக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறக் கூத்து வகைகளைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. இலக்கியங்கள் காட்டும் தமிழ் இசை மரபுகளைத் தொகுத்துரைக்க.

17. 'தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' - விவரிக்க.

18. 'காலந்தோறும் ஓவியக்கலை' - கட்டுரைக்க.

19. தமிழகக் கோயிற்கலையின் அமைப்பையும் சிறப்பையும் விரித்துரைக்க.

20. 'நாட்டுப்புறக் கலைகள்' - கட்டுரை வரைக.

———————